நாள்.03.03.2026

**அசல் வழக்கு எண். 164/2023**
**பெயர். இளவரசி**

**க.பெ. ரவி**

**பி.வா.சா.1–வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தனியார் வேலை செய்கிறேன். ஏற்கெனவே காவல்துறையில் பணிபுரிந்தேனா என்றால் இல்லை ஆனால் நான்அதற்கு தேர்வானேன். என் கணவர் லண்டனில் இறந்தார் என்றால் ஆமாம். அவர் இறந்து எத்தனை நாட்கள் கழித்து அவர் உடல் நாட்டுச்சாலைக்கு வந்தது என்றால் வரவில்லை அவரை 13 நாட்கள் கழித்து லண்டனிலேயே அடக்கம் செய்துவிட்டோம். அவர் இறந்த தேதி என்ன என்றால் 27.05.2006. என் கணவர் நாட்டுச்சாலையில் இறந்தார் என்றால் அது தவறு என்றால் ஆமாம். என் கணவரின் இறப்பு சான்றிதழை எப்படி வாங்கினேன் என்றால் லண்டனில் High commission போட்டு வாங்கினேன் என்றால் ஆமாம் ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

பி.வா.சா.ஆ.7 27.04.2023 ல் கிராம ஊராட்சி அலுவலகத்தில் மனு செய்தேன் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் இறப்பு சான்றிதழில் 27.05.2006 ல் நாட்டுச்சாலையில் இறந்ததாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.7 யை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வாங்கவில்லை என்றால் ஆமாம். என் கணவர் நாட்டுச்சாலையில் இறக்கவில்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ 7 என் செல்வாக்கை பயன்படுத்தி வாங்கியது அதனால் அந்த ஆவணம் செல்லாது என்றால் கலெக்டர் அலுவலத்தில் மனு கொடுத்ததுதான் நான் வாங்கினேன். என் மகளுக்கு கல்லூரியில் சேர்க்க அவசியம் என்பதால் நான் வாங்கினேன். என் கணவரின் தாத்தா வீரப்ப வேளாளரின் இறப்பு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். என் கணவரின் தாத்தாவிற்கு சொத்துகள் அதிகம் என்றால் ஆமாம். அந்த சொத்துகளை ரவி விற்றுவிட்டார் என்றால் இல்லை ரவியின் அப்பா ராமசந்திரன் தான் விற்று வீடு கட்டியுள்ளார்.

ரவியின் அம்மா பெயர் வீரம்மாள். ராமசந்திரன் சொத்துகளை விற்கவில்லை ரவிதான் விற்றார் நான் பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. எனக்கும் ரவிக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 1998ல். 1998 க்கு முன்பு வீரப்ப வேளாளர் குடும்பத்தில் நடந்த விவரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் இல்லை தெரியும் அவர்கள்

என் பக்கத்து வீடுதான். வீரப்ப வேளாளரின் அனைத்து சொத்துகளையும் அவர் இறப்பிற்கு பிறகு ரவி அடைந்து ரவி இறந்தபிறகு நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். வீரப்ப வேளாளர் என் கணவர் ரவியை தத்தெடுத்தபிறகுதான் இறந்துவிட்டார் என்றால் பொய். நான் தாக்கல் செய்த ஆவணத்தில் வீரப்ப வேளாளர் கையெழுத்து மற்றும் ராமசந்திரன் கையெழுத்து அந்த அந்த காலத்தில் அவரவரால் போடப்பட்ட கையெழுத்துதான்என்றால் ஆமாம் ஆனால் ராமசந்திரன் initial இல்லாமல் போடமாட்டார். ராமசந்திரன் அவர் கையெழுத்தை ராமசந்திரன் என்றும் போடுவார் initial போட்டும் போடுவார் என்றால் சரியல்ல.

நான் 12.05.2023 ல் பி.வா.சா.ஆ.8 ரவிக்கு வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம். நான் இணையதளம் மூலம் ரவியின் ஜெனன தகப்பனார் ராமசந்திரன் பெயரையும் தாயார் வீரம்மாள் பெயரையும் சேர்த்து பதிவு செய்தேன் என்றால் ஆமாம். பி.வா.சா.–8 பற்றி வாதிகளுக்கு தெரியாது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4,5,6 வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. ரவியின் தகப்பனார்தான் ஆவணங்களை வாங்கினார். நான் பிறந்த தேதி 20.04.1972. வீரப்ப வேளாளர் இறந்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் 4ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன் அவர் இறந்த விவரம் தெரியும். என் திருமணத்திற்கு முன்பும் வீரப்ப வேளாளர் குடும்பத்தில் நடந்த விவரங்கள், ஆவணங்கள் பற்றி நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். ஆனால் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். ராமசந்திரன் முதல் மனைவி வீரம்மாள் இறந்தபிறகுதான் அவர் தேன்மொழியை திருமணம் செய்துகொண்டார் என்றால் ஆமாம். 07.09.1975 ல் 1ம் வாதி திருமணம் செய்துகொண்ட திருமண பத்திரிக்கை வா.சா.ஆ.3 என்றால் திருமணம் நடந்தது தெரியும். 03.03.1979 ல் வீரப்ப வேளாளர் என் கணவர் ரவியை தத்தெடுத்து எடுத்து சுவீகார பத்திரம் பதிவு செய்துள்ளார்கள் என்றால் அது பொய்.

1979 ல் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் தெரியாது. அதனால் சுவீகார பத்திரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் வீரப்ப வேளாளர் 1977 ல் இறந்துவிட்டார் ஆனால் அதன்பிறகுதான் 1979 ல் சுவீகார பத்திரம் எழுதப்பட்டுள்ளது. 1979 சுவீகார பத்திரத்திற்கு பிறகுதான் வீரப்ப வேளாளர் இறந்தார் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. வா.சா.ஆ. 4 உண்மையானது என்றால் சரியல்ல. ராமசந்திர வேளாளர் 02.02.2015 ல் ஒரு உயில் எழுதி பதிவு செய்துள்ளார் அந்த ஆவணம் உண்மையானது என்றால் பொய். ராமசந்திர வேளாளரின் புகைப்படம் பார்த்துள்ளேனா என்றால் ஆமாம். என்னிடம்

உள்ளது. வா.சா.ஆ.5 ல் உள்ள புகைப்படம் மற்றும் கையெழுத்து அவருடையதுதான் என்றால்புகைப்படம் அவருடையதுதான். கையெழுத்தில் வித்தியாசம் உள்ளது. வா.சா.ஆ.5 ல் சாட்சிகள் முன்னிலையில் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பொய். வா.சா.ஆ.5 உயில் ஆவணம் உண்மையானது அதை பொய் என்று சொல்ல எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரம் பொய்யானது என்றால் சரியல்ல. ராமசந்திர வேளாளருக்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் அவர்களுக்கு பிராதுப்படி பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாரிசு சான்றிதழ் கேட்டு அதில் நானும்,ரவீனாவும் வாரிசு என்று பதிலுரை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் 1,2 பிரதிவாதிகளை பொறுத்து எந்த பரிகாரமும் கேட்கவில்லை அவர்களை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

***3,4*ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 சாட்சி மறுவிசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதித்தன்பேரில் மறுவிசாரணை(re examination)**

ரவியின் தாத்தா வீரப்ப வேளாளர் ரவியின் தாய்வழி தாத்தா என்றால் ஆமாம். வீரப்ப வேளாளர் எங்கிருந்தார் என்றால் சிங்கப்பூரில் இருந்தார். அவர் இடையில் வந்தாரா என்றால் வீடு பால்காச்சுக்கு வந்துவிட்டு 1977ற்கு பிறகு போகவில்லை அதன்பிறகு இறந்துவிட்டார். வீரப்ப வேளாளர் மனைவி பெயர் சின்னம்மாள். சின்னம்மாள் எந்த வருடம் இறந்தார் என்றால் 2006. 1998 ல் எனக்கு திருமணம் நடந்தபிறகு ராமசந்திர வேளாளர், ரவி குடும்பத்தில் நடந்த விவரம் பற்றி எனக்கு தெரியும் என்றால் ஆமாம். ராமசந்திர வேளாளர் வெளிநாடு போனாரா என்றால் 1988 ல் போனார் 1998 ல்தான் வந்தார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1988 லிருந்து 1998 வரை மலேசியா போனதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் 10ம் வகுப்பு படிக்கும்போது போனார் என் திருமணம் முடிந்தபிறகு வந்தார். ராமசந்திர வேளாளர் மலேசியாவில் இருந்தாலும் வருடத்திற்கு ஒருமுறை ஊருக்கு வந்துவிட்டு போவார் என்றால் அது பொய். வீரப்ப வேளாளர் மனைவி

சின்னம்மாள் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால்



இல்லை. ராமசந்திர வேளாளர் கையெழுத்து போடுவதை நான் நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் என் பாப்பா பள்ளிக்கு தேவைப்பட்டது அப்போது நான் பார்த்துள்ளேன். வேறு இடங்களுக்கு வந்து ராமசந்திரன் கையெழுத்து போட்டதை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged* ***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.

நாள்.03.03.2026

**அசல் வழக்கு எண். 246/2023**

**பெயர்.முருகேசன்**

**த.பெ.ராமசாமி**

**பி.வா.சா.1– வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஞானமணியை எனக்கு தெரியும் என்றால் ஆமாம். கணக்குபிள்ளை கனகசபை மூலம் எனக்கு தெரியும். எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 10,11 வருடங்களாக தெரியும். கனகசபை பெயரை வழக்கில் சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் வாதியுடன் கடலை வியாபாரம் செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் செய்யவில்லை என் அப்பாதான் செய்தார். எந்த வருடம் கடலை வியாபாரம் செய்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் முதலில் பிரஸ்சில் வேலை செய்தேன் அதன்பிறகு சொந்தமாக பிரஸ் வைத்திருந்தேன். தற்போது காய்கறி வியாபாரம் செய்கிறேன். காய்கறி வியாபாரம் செய்வதற்கு license வாங்கியுள்ளேனா என்றால் ஆமாம்.

எனக்கு சொந்தமாக வீடு, மனை உள்ளதா என்றால் என் பெயரில் இல்லை என் அப்பா பெயரில் உள்ளது. அந்த இடத்தில் தான் குடியிருக்கிறேன் என்றால் ஆமாம். வழக்கு நோட்டீஸ் யார் வாங்கியது என்றால் என் அப்பா வாங்கினார் நான் இருந்தேன். அதற்கு பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றால் ஆமாம். நான் போதிய வசதி இல்லை என்று சொல்லியுள்ளேன் எவ்வளவு வசதி உள்ளது என்றால் வீடு மட்டும்தான் உள்ளது வேலைக்கு போகவில்லை சும்மா இருக்கிறேன். எனக்கு போதிய வசதி உள்ளது வேலையும் பார்க்கிறேன் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து வந்த சம்மனை யார் வாங்கியது என்றால் என் அப்பா வாங்கினார். அதன்பிறகு வழக்கறிஞர் வைத்து வழக்கை நடத்துகிறேன் என்றால் ஆமாம்.

அஞ்சல் ஒப்புதல் அட்டை வாதிக்கு வரவில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் கையெழுத்து போட்டு நோட்டீஸ் வாங்கினேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் இல்லை. 02.02.2021 ல் வாதியிடமிருந்து ரூ.30,000/- கடன் வாங்கிக்கொண்டு நான் சாட்சிகள் முன்னிலையில் வா.சா. ஆ.1ல் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் நான் கையெழுத்து போடவில்லை. வா.சா.ஆ.1 ல் கடன் வாங்கும்போது ஒரு கையெழுத்தும்